ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பரமகாருணிகரான

பெரியவாச்சான்பிள்ளை

முதலான பூர்வாசார்யர்கள்

அருளிச்செய்த

# ரஹஸ்யங்கள்.

இரண்டாவது.

க. வார்த்தாமாலை.

உ. பட்டர் நஞ்சியருக்கருளிச் செய்த பத்தர்த்தம்.

ங. திருக்குருகைரத்நம்.

ஸ்ரீமாந் - உ - வே

அரசாணிபாலை-கந்தாடை

கிருஷ்ணமாசார்யர்ஸ்வாமியால்

பரிசோதிக்கப்பட்டு,

செஞ்சி - இல்வீடு

அரங்கசாமிமுதலியார்

அண்ட் கம்பினியாரால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1890.

*Registered Copy-right.*

# விளம்பரம்.


---

இந்த க்ரந்தமும், மற்றும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் வேண்டுமவர்கள்;

(க) திருவல்லிக்கேணி-பேயாழ்வார்ஸந்நிதிவீதி-க0-வது கதவிலக்கமுள்ள மாளிகையில், (போஸ்ட் மாஸ்டர்ஜனரல்ஸ் ஆபீஸ்-க்ளர்க்) அரசாணிபாலை-கந்தாடை-கிருஷ்ணமாசாரியரிடத்திலும்;

(உ) திருவல்லிக்கேணி-வீரராகவமுதலிவீதி-52-வது கதவிலக்கமுள்ள மாளிகையில், (மக்டோவல் அண்ட் கம்பினி) செஞ்சி-இல்வீடு-அரங்கசாமிமுதலியாரிடத்திலும்;

(ங) சென்னையில்-சவரன்விற்கும் சராப்புக்கடைக்கு மேலண்டை செ-இ-அரங்கசாமிமுதலியார் அண்ட் கம்பினியாருடைய புஸ்தகஷாப்பிலும் வாங்கிக்கொள்ளலாம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வார்த்தாமாலை.

க. மத்ஸ்யத்தினுடைய ஆகாரமெல்லாம் ஜலமயமாயிருக்குமாப்போலே, ஸ்ரீமானுடைய வடிவந்தனையும் ஸ்ரீமயமாயிருக்கும் என்று (க) பெரியமுதலியார் அருளிச்செய்வர்.

உ. ஸம்ஸாரவிஷ தஷ்டனுக்கு ரஸாயந ஸேவை போலே என்று மணக்கால்நம்பி அருளிச்செய்வர்.

ங. அந்தனுக்கு மஹாநிதிபோலே என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி.

ச. (உ) த்ருஷார்த்தனுக்கு அம்ருதபாநம்போலே என்று திருமாலையாண்டான் அருளிச்செய்வர்.

ரு. ஸ்தநந்தயப்ரஜைக்கு ஸ்தந்யம்போலே என்று திருக்கோட்டியூர்நம்பி அருளிச்செய்வர்.

சு. பதிவ்ரதைக்கு மங்களஸூத்ரம்போலே என்று பெரியநம்பி அருளிச்செய்வர்.

எ. ராஜகுலத்துக்கு முடியும் மாலையும்போலே ப்ரபந்நகுலத்துக்கு த்வயோச்சாரணம் என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்வர்.

அ. குருபரம்பரையை யொழிந்த த்வயமும் ஸாதநாந்தரத்தோடொக்கும் என்று முதலியாண்டான் அருளிச்செய்வர்.

---

(க) பெரியமுதலியார் - ஸ்ரீமந்நாதமுனிகள்.

(உ) த்ருஷார்த்தன் - தாகத்தினால் ஏங்கினவன்.

௯. எலுமிச்சம்பழம் கொடுத்து ராஜ்யம் பெறுவா ரைப்போலே என்று திருக்குருகைப்பிரான்பிள்ளான் பணிப்பர்.

௰. பிறவிமிடியன்கையிலே சிந்தாமணி புகுந்தா ப்போலே என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர் அருளிச் செய்வர்.

௧௧. ராஜகுமாரனுக்கு கர்ப்பூர நிகரம்போலே, பாரதந்த்ரனுக்கு ப்ரபத்தியைவிடில் நாக்குவரளும் என்று நம் பிள்ளை அருளிச்செய்வர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

வார்த்தாமாலை - ஸம்பூர்ணம்.

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

## பட்டர் நஞ்சீயருக்கருளிச்செய்த

# பத்தார்த்தம்,

---

சரக்கேற்றின மரக்கலத்துக்குக் கேடு, காற்றாலே யாதல், மஹாமத்ஸ்யங்களுடைய(க) புச்சவிக்ஷேபத்தா லேயாதல், ஸமுத்ரஸ்த பர்வத ஶிகரத்திலேதட்டியாத ல், பெருங்கடல்பாய்ந்துப்ரதீகாரமில்லாத அழிவுவருமா ப்போலே; எம்பெருமான்திருவடிகளில் பண்ணிவைத்த ப்ராப்திக்கும், பகவத் பாகவத விஷயங்களிலே அறிந் தும் அறியாமலும் பண்ணின அபசாரங்களாலே சில அந்தராயங்கள் நாஶபர்யந்தமாக வந்து ஸம்பவிக்கும்: தத் பயஸம்பாவநாநிவ்ருத்யர்த்தமாகவே இப்பத்துவார் த்தையையும் கேட்டு புத்திபண்ணி நிர்ப்பரனாய், மார் பிலே கையைவைத் துறங்குவது. அவை யெவை யென்னில்;—

க. ஆசார்யன் திருவுள்ளத்தாலே அநவரதம் நினை க்கும்படி ஶரீரார்த்த ப்ராணங்களை அழியமாறியாகிலும் ஒரு கைங்கர்யம் உறுதியாகச்செய்வது;

---

(க) புச்சவிக்ஷேபம் - வாலை அசைத்தல்.

௨. பகவத் விஷயத்திலும், எல்லாரும் கொண்டாடும்படியாகவும், திருவுள்ளத்துக்குப் பாங்காகவும், தன் நெஞ்சுஉணரவும், ஒரு ஸ்ரீகார்யம் செய்வது;

௩. பாகவத விஷயத்திலும், அப்படியே பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோஷ்டியிலும், "இன்னான் கல்யாணன், பாகவதவிஷயத்தில் செய்து போரும்படியே அழகிது!" என்று கொண்டாடும்படி போரவும்;

௪. அந்யதேவதோபாஸநாதிகளை ஆசரியா தொழியவும்; அந்யதேவதோபாஸகரோடு ஸஹகமந ஸஹவாஸ ஸஹாவஸ்தாந ஸம்பாஷணாதிகளை வருந்தியும் ஒழியவும்;

௫. வறு நாற்றத்தை யாசைப்பட்டு பெருச்சாளி இடரிலே யகப்பட்டு அநர்த்தப்படுமாப்போலே, அர்த்த ஸம்பந்தாதி நிமித்தமான போஜநாதிகளாலே ஜ்ஞாந ஹாநிபிறந்து,ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியிலும்பஹிஷ்க்ருதனாய்விடும்; ஶிரச்சேதாபிஷேகபர்யந்தமான மஹாபத் ஸம்பத்துக்கள் ஸம்பாவிதமானாலும், ஜ்ஞாநதர்ம ப்ரச்யுதி பிறவாதபடி த்ருடாத்யவஸாய காஷ்டாகதனாயிருக்கவும்; இதுக்கு த்ருஷ்டாந்தபூதரிறே-பெரியநம்பியும், கூரத்தாழ்வானும்;

௬. ஸாமாந்யஶாஸ்த்ரத்தில் கண்வையாதே விஶேஷ ஶாஸ்த்ரத்திலே அநவரத த்ருஷ்டியாய் அநுஷ்டாநத்திலும் அப்படியே ஒருங்கப்பிடித்துப்போரவும்; ஆதிபரதனும் திருக்கண்ணமங்கையாண்டானுமிறேயிதுக்கு உபமாநபூதர்;

௭. நமக்கெட்டாத நிலமன்றோவென்னில்:—ஏறுவான சாரங் குதிரை இன்னெஞ்சற் கெல்லாமரிதிறே. அத்யவஸாய மப்யஸிக்க வருமையில்லை. ஒருத்தி அப்யாஸத்தாலே ஆனையை யெடுத்துக் காட்டினாள் என்று பழஞ்சொல் இல்லையோ ?.

௮. கோயில் திருமலை பெருமாள்கோயில் தொடக்கமான ப்ரஸித்த க்ஷேத்ரங்களிலே நித்யவாஸம் பண்ணுதல், அங்கே நித்யவாஸம்பண்ணும் அபியுக்தரான

ஸ்ரீவைஷ்ணவர்கள் பலகாலும் நினைக்கும்படி ஆபிமுக்யம்பண்ணுதல், அர்த்தோபகாராதிகளாலே அநுவர்த்தித்துக்கொண்டு போரவும் ;

௯. புத்ர க்ஷேத்ர களத்ரார்த்த மித்ர தேஹாதிகளில் அதி ப்ரவ்ருத்திபண்ணாதே, ஆசார்யன் ஆத்மஹிதம்பண்ணினதுக்கு ஒரு வாசிதெரிய அவற்றோடு ஒட்டற்று வர்த்திக்கவும்;

௧௦. ஸர்வவித பந்துவான எம்பெருமானை நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டுமே என்று அபேக்ஷித்துப் போரவும்.

**இப் பத்து அர்த்தமும், ப்ரபத்திஸ்தாநம்.**

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

பட்டர் நஞ்சீயருக்கருளிச்செய்த

பத்தார்த்தம் - ஸம்பூர்ணம்.

---

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

# திருக்குருகைரத்நம்.

---

திருநாமதாரி முத்ராதாரி மந்த்ரஸம்பந்தி என்கிறவன், ப்ரக்ருதிருசியொழிய ஸ்வரூபருசி அறியான்; ஆகையால், ரூபநாமங்களால் போராது; ஸச்சிஷ்ய ஸதாசார்ய ஸம்பந்தமும், ஜீவாத்மா பரமாத்மா ஸம்பந்தமும், திருமந்த்ரத்தாலே, தன்னை உள்ளபடி உணரவேணும்; சரமஸ்லோகத்தாலே, எம்பெருமான்றனே உபாயம் என்று தெளியவேணும்; த்வயத்தாலே, உபாயோபேயாந்தர நிவ்ருத்தியான த்வயாநுஸந்தாந பரனாய், நிர்ப்பரனாய், நிர்விகாரனாய், ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளிலே பண்ணும் நித்யகைங்கர்யமறியவேணும்;

நித்யகைங்கர்யமறியும்போது, ததீயகைங்கர்யமறியவே
ணும்; இப்படியன்றிக்கே ஶாஸ்த்ரத்தாலே பாவிக்கில்
"நானறிகிறேன்" என்கிறவன் அறியான்; அவனோட்டை
ஸஹவாஸம், அந்யஶேஷத்வம்; ஸ்வரூபவானாய் புருஷகா
ரபூதனான ஆசார்யனறிகையிலே தத்வத்ரயஶிக்ஷையும்
ரஹஸ்யத்ரய ஶிக்ஷையும் உடையனாகில், அவனோட்
டை ஸஹவாஸம் ஸ்வரூபோஜ்ஜீவநம்; இப்படியன்றிக்
கே, உபாயாந்தரராகிலன்றோ கூழாளாகிறது? "தானும்
பிறரும் தனக்குத்தஞ்சமன்று" என்றிருக்கும் ஆகிஞ்
சந்ய மன்றோ? (நாடுநகரமும் நன்கறிய நமோநாராய
ணாய) என்கிறபடியே * அநந்தாவை வேதத்துக்கு அ
திகாரியாய், தேஹமிட்டவழக்கன்றிக்கே, தேஹிகளிட்
ட வழக்கன்றிக்கே, தேஹாநுபந்திகளான பதார்த்தங்க
ளிட்ட வழக்கன்றிக்கே, ஸ்வரூபமிட்டவழக்கானபோ
தன்றோ? தான் அவன்றிருவுள்ளமறிந்தஶ்ரீவைஷ்ணவனா
வது. தேஹமிட்டவழக்கன்றிக்கே, பூர்வவத் பூர்வதசை
பரித்யாஜ்யம்; உத்தரதசை ஆத்மஸாக்ஷாத்கார ஜ்ஞாந
முடையனாய், ஆசார்யாநுபவ ஸாக்ஷாத்கார ஜ்ஞாந மு
டையனாய், *பிடித்தார் பிடித்தாரைப்பற்றித் திருவடிக
ளிலேபணணும் அநவரத நித்ய கல்யாண போக ஸர்வ
கந்தஸ் ஸர்வரஸஸ் ஸதா பஶ்யந்தி பண்ணுகையன்றோ
ஸ்வரூபலாபம்?. இப்படி ஜ்ஞாநமும் விரக்தியும் ஶாந்தி
யுமுடையனாயிருக்கு மொரு ப்ரபந்ந னபிமாநத்திலே
யொதுங்கி வர்த்தித்தல், தன்னாசார்ய னபிமாநத்திலே
யொதுங்கி வர்த்தித்தல், அப்போதன்றோ தன் ஸ்வரூ
பத்துக்கு அநுரூபமான வ்ருத்தியும் ஸ்வயம்பாகமும
திருமண் தீர்த்தப்ரஸாதமு முடையனாய் வாழும்நாளா
கிறது! அப்போதன்றோ (శరీరమర్థం ప్రాణఞ్చ సద్గురుభ్యో
నివేదయేత్ - ஶரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ

கிவேதயேத்) என்கிற ப்ரமாணம்! அதநினைகயன்றோ உஜ்ஜீவநம்? இது தர்ஶநார்த்தம் உட்பட்ட மிகை. இது ஸ்வரூபஶோதனை; அதிகாரிக்கு அறியவேண்டுவது. அவ்வதிகாரி தீர்த்தப்ரஸாத முடையனாகையாலே பரிஜ்ஞாநம் எல்லா மவனுக்கே வந்தது. வைகுந்தமாவது இவன் கையதாம் என்கிறவ னன்றோ அதிகாரி? இப்படியன்றிக்கே, ஸகலவேதஶாஸ்த்ரங்களாலும் ஸர்வப்ரமாணங்களாலும் சொல்லுகிறது என்று ஶப்தத்தாலே அறியவொண்ணாது. அநுபவ ஸித்தமான ஸத்கடாக்ஷத்தாலே தன்னைக் கொடுத்து ரக்ஷிக்கும்போது,இவையித்தனையும் ப்ரமாணம். தர்ஶநவாய்ச் சொன்னானென்றும், தர்ஶநகுணங்கள் போருமென்றும் ரூபநாமதேயங்களைக்கண்டு தன் ப்ரேமத்தாலே செய்யுமாகில், அதுவும் அங்கதீர்த்த ப்ரஸாதம் ஆத்ம நாஶம். பெருக்காற்றிலே யிழிவானொருவன் துறைமுக மறியாமல் தானே அக்கரைப்படுகிறேன் என்று இழியுமாகில், தன் கைங்கர்யம் முடியும்; அதிகாரி அதிகாரியோடே யிழியுமாகில் அக்கரைப்படலாவது. அக்கரை யாவது-விரஜைக்கரை. அப்போதன்றோ நித்யனாய் நித்யாநுபவம்பண்ணும் நித்யரோடே ஒரு கோவையாய்? இது; சேனைமுதலியார் நம்மாழ்வார்க் கருளிச்செய்த த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம்; நம்மாழ்வார் ஸ்ரீமது-கவியாழ்வார்க் கருளிச்செய்த த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம்; ஆளவந்தார் திருக்கோட்டியூர்நம்பி கருளிச்செய்த த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம்.

பெரியவாச்சான்பிள்ளைதிருவடிகளேசரணம்.

---

திருக்குருகை ரத்நம்—ஸம்பூர்ணம்.